# கம்பராமாயணத்தில் சூர்ப்பணகையின் சொல்லாடல் திறன்

முனைவர் மு கவிதா தேவி

உதவி பேராசிரியர், தமிழ்த் துறை (அரசு உதவி பெறும் பிரிவு)

நிர்மலா மகளிர் கல்லூரி, கோயம்புத்தூர்- 18.

Email.ID drkavithadevi10@gmail.com

9

**ஆய்வுச் சுருக்கம்:**

**கம்பராமாயணத்தில் சூர்ப்பணகையின் சொல்லாடல் திறன்**

கம்பராமாயணத்தின் ஆரண்ய காண்டத்தில் இடம்பெறும் சூர்ப்பணகை கதாபாத்திரம், காப்பியத்தின் திருப்புமுனையாக மட்டுமன்றி, கம்பனின் சொல்லாடல் நயத்தை வெளிப்படுத்தும் முக்கிய இலக்கியக் கருவியாகவும் விளங்குகிறது. இராமனுக்கும் சூர்ப்பணகைக்கும் இடையே நிகழும் உரையாடல்கள் நகைச்சுவை, கற்பனை, உளவியல் நுட்பம் மற்றும் காப்பிய நகர்வின் அடித்தளமாக அமைகின்றன. இவ்வாய்வில் சூர்ப்பணகையின் உரையாடல் திறன், அவளது சூழ்ச்சிமிக்க மொழிநடை, மற்றும் இராமாயணத்தின் பின்பாதி நிகழ்வுகளை நகர்த்தும் அவளது பங்கு ஆகியவை ஆராயப்படுகின்றன.கம்பராமாயணத்தில் சீதைக்கு அடுத்தபடியாக குறிப்பிடத்தக்க பெண் கதாபாத்திரமாக சூர்ப்பணகை விளங்குகின்றாள். ஆரண்ய காண்டத்தில் அவளது வருகை காப்பியத்தின் நகர்வை மாற்றும் திருப்புமுனையாக அமைகிறது. இராமனின் அவதார நோக்கம் நிறைவேறுவதற்கும் இராவணனின் அழிவு தொடங்குவதற்கும் சூர்ப்பணகை முக்கிய காரணியாக உள்ளாள். கம்பன், அவளது உரையாடல்களின் வழியாக நகைச்சுவை, கற்பனை, மற்றும் சொல்நயத்தை சிறப்பாக வெளிப்படுத்துகின்றார்.

**முக்கியச் சொற்கள்**: கம்பராமாயணம், சூர்ப்பணகை, சொல்லாடல் திறன், ஆரண்ய காண்டம், காப்பிய நயம்

## முன்னுரை

இராமனுக்கும் சூர்ப்பனகைக்கும் இடையே நடந்த உரையாடலைக் கம்பர் கையாண்ட நயம் குறித்து இவ் ஆய்வு கட்டுரையில் கருத்துக்கள் நோக்கப்பட உள்ளன. கவிச்சக்கரவர்த்தி கம்பன் ஆரண்ய காண்டத்தில் சூர்ப்பனகை என்ற கதாபாத்திரத்தின் வழியாக சொல்லாடல் நயத்தினை மிகச் சிறப்பாக வெளிப்படுத்துகின்றார். ராமனிடத்தில்

சூர்ப்பனகையை பேச வைத்து, இராமன் கேலியாகப் பேசுவதால் சூர்ப்பனகையின் சொல் திறன் வெளிப்படுத்துகின்றது. அதன் வாயிலாக ஒரு நகைச்சுவை உணர்வினையும் படிக்கின்றவர்களின் மனதிலே ஒருவித இன்பத்தையும் இதழ்களுக்கிடையே ஒரு புன்னகையையும் வரவழைக்கின்றார் கம்பர். இராமாயணத்தில் பெண்கள் கதாபாத்திரங்கள் பலர் வந்தாலும் சீதா தேவிக்கு அடுத்தபடியாக ஆரண்ய காண்டத்தில் சூர்ப்பனகையின் வருகை என்பது மிக முக்கியத்துவம் பெறுகின்றது. அயோத்திய காண்டத்தில் கைகேயி இல்லாவிட்டால் எப்படி புராண நகர்வு என்பது இருந்திருக்காது. அது போன்றே ஆரண்ய காண்டத்தில் சூர்ப்பனகை இராமனை சந்திக்காது இருந்திருந்தால் புராணத்தின் திருப்புமுனை என்பது இல்லாமல் போயிருக்கும்; சுவாரஸ்யம் குறைந்து போய் இருக்கும்; ராமன் மிகப்பெரிய புராண நாயகனாக விளங்குவதற்கு மிக மிக ஒரு முக்கிய காரணமாக கதாபாத்திரமாகக் கம்பர் இங்கே சூர்ப்பனகை என்ற கதாபாத்திரத்தைப் படைத்து அவள் பேசுவதன் வாயிலாக சொல்நயத்தையும் அவளின் அழகையும் இராமனின் உரையாடல் வாயிலாக அவளின் அழகையும் சொல்லாடல் திறத்தையும் மிக அற்புதமாக வெளிப்படுத்துகின்றார். இராமாயணத்தின் பின்பாதி நகர்வுக்கு மிகப்பெரிய காரண ஊக்கியாக இருப்பது சூர்ப்பனகை கதாபாத்திரம் மட்டுமல்ல; சூர்ப்பணகை பேசுகின்ற சொல்லாடல் திறம் மிக மிக முக்கியக் காரணமாகப் பேசப்படுகின்றது. இராமனின் அவதார நோக்கம் அரக்கர்களை அழிப்பது அந்த நோக்கம் நிறைவேறுவதற்கு தூண்டுகோலாக இருப்பவள் சூர்ப்பணகை. அந்த வகையில் இந்த ஆய்வு கட்டுரை கம்பனின் சொல்லாடல் திறத்தை சூர்ப்பணகை என்ற வஞ்சமகளின் உரையாடல் திறம் வாயிலாக மிக அற்புதமாக எடுத்துக்காட்டுகின்றது..

**சூர்ப்பணகை என்ற பெயரின் பொருள்**

**'சூர்ப்பணகை'** என்ற பெயரில் சூர்ப்பநகா என்பது வடமொழிச் சொல்..சூர்ப்பம் என்றால் முறம். நகா என்றால் நகம். முறத்தளவு நகம் பெற்றவள். ஒரு விரல் ஒரு நகம் முறத்தளவு இருந்தால் விரல்கள் எவ்வளவு நீளமாக இருக்கும் பெரியதாக இருக்கும் அப்படி என்றால் கை எவ்வளவு பெரியதாக இருக்கும். அதை தாங்கக்கூடிய கூடிய உடல் எவ்வளவு பெரியதாக இருக்கும்? அதிக பயங்கர உருவத்தைக் கொண்டவளாக சூர்ப்பணகை விளங்கினாள்..

**இராமனைக் கண்ட சூர்ப்பணகை செய்த தந்திரம் :**

இத்தகைய தோற்றத்தை உடைய சூர்ப்பணகை நேர் எதிராக ராமனின் தோற்றத்தைக்

கண்டாள் ; கண்டதும் காதல் கொண்டாள்; காமம் வயப்பட்டாள். இராமனது கையழகு, தோளழகு, திருமுக அழகு இடையழகு முடியழகு இவற்றையெல்லாம் கண்டதும் காமவசப்பட்டு கலங்கினாள்.

**"வான்தனில் வரைந்தது ஓர் மாதர் ஓவியம்**

**போன்றனள் புலர்ந்தனள் புழுங்கு நெஞ்சினள்**

**தோன்றல் தன் சுடர்மணித் தோளில் நாட்டங்கள் ஊன்றினள்**

**பறிக்க ஓர் ஊக்கம் பெற்றிலள்."(கம்ப..ஆரண்ய. கா. சூர்.படலம் பா எ.2758.)**

ராமனை வைத்த கண் வாங்காமல் பார்த்தாள் வானத்தில் எழுதிய ஓவியம் போல திகைத்து நின்றாள். ராமனின் அழகைக் கண்டு திகைக்க மாட்டாது, அவனைச் சேர கருதினாள். ஆதலால் மிகவும் சிந்தித்து ஒரு முடிவு எடுத்தாள் அழகிய உருவத்தை எடுப்பதற்கான மந்திரத்தைச் செபித்தாள். திருமகளை மனதில் தியானித்த தருணத்திலே அழகான சிவந்த மேனியை உடையவளாய் ஒளிமிகுந்த அழகுடன் மிளிர்ந்தாள் இப்படித் தோன்றிய சூர்ப்பணகை ராமனின் எதிரில் வந்து நின்றாள்.

**''திங்களின் என்ற சிறந்து ஒளிர் முகத்தள் செவ்வியள்**

**பொங்குஒளி விசும்பினில் பொலியத் தோன்றினாள்."(கம்ப..ஆரண்ய. கா. சூர்.படலம் பா எ.2761:3-4.)**

**சூர்ப்பணகையின் வருகை**

கம்பராமாயணத்தில் கம்பன் சூர்ப்பணகையின் வருகையை ஒரு மறைவிடத்தில் இருந்து அவள் ராமனை கண்டு ஒருதலை பட்சமாக காதல் உருகின்ற காட்சியை தான் முதன் முதலில் நமக்கு வெளிப்படுத்துகின்றார் பெண்கள் காதலை சொல்லுவது நாகரீகமாகாது என்று ஒரு காலகட்டத்தில் ஒரு பெண் ஒரு ஆடவனைக் கண்டு காமம் உற்று அவளிடத்தில் தன் காதல் வேட்கையை சொல்லுவதாக அமைகின்றார். இதில் கம்பன் சூர்ப்பணகையை ஒரு ஆற்றல் மிகுந்த பெண்ணாக தான் படைக்கின்றார் . இக் காப்பியத்தை ஆழ்ந்துநோக்குவோருக்கு புரியும். அவளை அறிமுகப்படுத்துகின்ற போதே கம்பன்சொல்லக்கூடிய எதிர்கால நிகழ்வுகளை சூர்ப்பணகை கதாபாத்திரத்தின் .வழியே வெளிப்படுத்துகிறார்.இந்தக் காப்பியத்தின் விரைவில் என்ன நிகழும் என்பதை அவளின் கதாபாத்திர அறிமுக ஊடாகவும் தெரியப்படுத்துகிறார்.

**'நீலு மாமணி நிற நிருதர் வேந்தனை**

**மூல நாசம் பெறமுடிக்கும் மொய்ப்பினாள்**

**மேலே நாள் உயிரோடும் வந்து தான் விளை**

**காலம் ஓர்ந்து உடன் உறை கடிய நோய் அனாள்''(கம்ப..ஆரண்ய. கா. சூர்.படலம் பா எ.2739)**

**உடலுடன் பிறந்து கொல்லும் வியாதியைப் போன்றவள்**

அரக்கர் வேந்தனை மூலநாசம் செய்ய போகின்ற இயல்பை உடையவள் பிறக்கும்போதே உயிருடன் கூட பிறந்து தகுதியான நேரம் பார்த்து உடலுடன் வாசம் செய்து கடைசியில் உயிரை உறிஞ்சி விடுகின்ற கொடிய நோய் போன்ற விஷமான சூர்ப்பணகை ராமன் இருக்கும் இடம் வந்து சேர்ந்தாள் என்று கம்பன் கூறுகின்றான்.உடலுடன் பிறந்து கொல்லும் வியாதியைப் போல ராவணனுக்கு உடன்பிறந்தவளான சூர்ப்பணகையினால் அழிவு நேரம் போகின்றது என்பதை

**"உடன் பிறந்தார் சுற்றத்தார் என்றிருக்க வேண்டா**

**உடன் பிறந்தே கொல்லும் வியாதி..."(அவ்வையார் பாடல். மூதுரை பா.எ.20:3-4.)**

இதே உவமை நயத்தை கம்பநாட்டாழ்வாரும் கையாளுகின்றார். அவ்வாறு ராவணனின் உயிரைக் குடிக்கும் உடன் பிறந்தாளின் உருவத்தைக் கம்பன் வர்ணிக்கின்ற போது செம்பின் நிறத்தைப் போன்று அடர்ந்த செம்பட்டை மயிரினையுடையவள். ராகு என்னும் கொடிய கிரகத்தைப் போன்று வளர்ந்த உடம்பினை உடையவள். தேவர்களுக்கும் தவசிகளுக்கும் முடிவு கட்ட வந்தவள் என்று அவளுடைய உருவத்தையும் குணத்தையும் வர்ணிக்கின்றான்.

**இராமனும் கண்ட வஞ்ச மகளின் தோற்றம்**

பஞ்சு ஒளிர் பிஞ்சு குளிர் பல்லவம் அணுக பூங்கொடி போல் எதிர் வந்த சூர்ப்பனகை பார்த்து ராமன் கண்டு வியக்கிறான்.

**"பேர் உழைய நாகர் உலகில் பிறிதின் வானில்**

**பார் உழையின் இல்லது ஒரி மெல்உருவமான**

**ஆர்உழை அடங்கும் அழகிற்கு அவதிஉண்டோ?**

**நேரிழையர் யாவர் இவர் நேரென நினைத்தான்." (கம்ப..ஆரண்ய. கா. சூர்.படலம் பா எ.2767)**

இப்படிப்பட்ட இனிய தோற்றத்துடனும் இனிமையான குரலுடனும் அன்ன நடை நடந்து வந்த சூர்ப்பணகையை இராமனும் கண்டான்.

**"பஞ்சி ஒளிர் விஞ்சு குளிர் பல்லவம் அனுங்கச்**

**செஞ்செவிய கஞ்ச நிமிர் சீறடி பெயர்ப்பாள்**

**அஞ்சொல் இளமஞ்ஞையென அன்னமென மின்னும்**

**வஞ்சியென நஞ்சமென வஞ்சமகள் வந்தாள்."**

**(கம்ப..ஆரண்ய. கா. சூர்.படலம் பா எ.2762)**

நாகலோகத்திலும் வானுலகத்திலும் இந்த பூமியிலும் இல்லாத ஒரு பெயர் அழகு இவள் யாராக இருக்கும் பேரழகு உடைய இவள் யாராக இருப்பாள் தக்க ஆபரணங்களை அணிந்த மகளிரும் இவளுக்கு ஒப்பாவரோ என்று வியந்து நின்ற ராமனிடம் சூர்ப்பனகை வணங்கி நின்றாள்.

**திருமகள் போன்ற தோற்றமுடையவளே தீங்கில்லாதவளை உன்னுடைய வரவு நல்வரவாக இருக்கட்டும் ஏது பதி? ஏது பெயர்? யாவர் உறவு? (கம்ப..ஆரண்ய. கா. சூர்.படலம் பா எ.2769)**

என்றான். ஏகபத்தினி விரதனான இராமனும் சூர்ப்பணகையைப் பார்த்து கேட்கிறான் யார் நீ யாருடையவள் நீ இதே இத்தனை மனோகரமான தேன் அழகிய தோற்றத்துடன் வந்திருக்கும் நீ ராட்சஸியாகத் தோன்றவில்லை நீ எதற்காக வந்திருக்கிறாய்? உன்னைப் பற்றித் தெரிந்துகொள்ள விரும்புகிறேன் என்கிறான்..

**இராமனுக்கும் சூர்ப்பணகைக்கும் நடந்த உரையாடல் திறன்**

சூர்ப்பணகை என்னும் இராட்சஸி. நினைத்தபடி பல வடிவம் எடுக்கும் வல்லமை கொண்டவள். வீரன் விச்ரவசுவின் குமாரனும் ராட்சஸ ராஜாவுமான ராவணன் எனக்கு உடன்பிறப்பாகிய அண்ணன். எப்போதும் தூங்கும் ஆற்றல் கொண்ட சகோதரனான கும்பகர்ணன் மற்றும் தர்மத்தின் பாதையில் செல்லும் விபீஷணன்

ஆகியோர் என் உடன் பிறந்த அண்ணமார்கள் ஆவார்கள். போர்களில் வல்லமை கொண்ட கரதூஷணர்களும் உடன் பிறந்தவர்கள்தான். பயப்படாதே! நான் அவர்கள் எல்லோரையும் மீறி நடப்பவள். என் இஷ்டப்படிதான் இருப்பேன் உன்னை என் மனதில் கணவனாக வரிந்து விட்டேன் என்றாள்.

சூர்ப்பணகை தன் உயர்ந்த குலத்தையும் தன் உடன் பிறந்தாரின் பெருமையும் அளப்பரிய ஆற்றலையும் விவரித்துக் கூறுகின்றாள்

**“பூவிலோன் புதல்வன் மைந்தன் புதல்வி முப்புரங்கள் செற்ற**
**சேவலோன் துணைவனான என்ற செங்கையோன் தங்கை திக்கின்**
**மா எலாம் தொலைத்துவெள்ளிமலை எடுத்து உலகமூன்றும்**

**காவலோன் பின்னை காமவல்லியாம் கன்னி என்றாள்” (கம்ப..ஆரண்ய. கா. சூர்.படலம்**

**பா எ.2770)**

இதைக் கேட்ட ராமன் அரக்கக்குலத்தைச் சார்ந்த ராவணனுக்கு இப்படிப்பட்ட அழகு வாய்ந்த தங்கை பிறந்தது எப்படி என்று கேட்டான் அதற்கு சூர்ப்பனகை மிகத் தந்திரமாகப் பதில் கூறினாள்.

ராவணனைப் போன்று அரக்கர் குணம் படைத்தவர்களோடு வாழ விரும்பாமல் அறவழியில் வாழ விரும்பி தவமியற்றி தேவர்களின் அனுகிரகம் பெற்று இவ் உருவத்தைப் பெற்றேன் என்றாள்.

அப்படியும் ராமன் விட்டான் இல்லை தேவேந்திரனுக்கு குற்றேவல் புரியும் ராவணனது தங்கையானால் செல்வச் சிறப்போடு வராமல் துணையின்றித் தனியாக வரக் காரணம் என்ன என்று கேட்டான் ராமன். நான் ராவணனின் தங்கையாக இருந்தாலும் நற்குணம் இல்லாத அரக்கர்கள் இடத்து சேர விரும்பாமல் முனிவர்கள் இடத்தில் சேர்ந்து கொண்டேன். இதில் ஒரு **'காரியம் உண்மை நின்னைக்காணியே வந்தேன்' (கம்ப..ஆரண்ய. கா. சூர்.படலம் பா எ.2774;4)** என்றாள். அதற்கு **ராமன்'என்ன காரியத்தை சொல் அஃது இயைபு மேல் இழைப்பல் என்றான்.' கம்ப..ஆரண்ய. கா. சூர்.படலம் பா எ.2775)** மிகத் திறமையாக ராமனின் கேள்விக்கு பதிலுரைத்தாள் சூர்ப்பணகை. சிறந்த குலத்தில் பிறந்த பெண் தங்களுக்கு உற்ற காமத்தை வெளிப்படையாக சொல்ல மாட்டார்கள் அவ்வாறு இருக்க காமன் ஒருவன் செய்யும் தன்மையை தடுத்து என்னைக் காப்பாயாக என்று ராமனை நோக்கிக் கூறுகின்றாள். அதைக் கேட்ட அளவிலேயே இராமன் அவளுடைய தன்மையை அளவிடுகிறான் .

**'நாணிலாள் ஐயள் நொய்யள் நல்லளும் அல்லள் என்றான்.'(கம்ப..ஆரண்ய. கா. சூர்.படலம் பா எ.2777:3-4)**

உடனே சுதாரித்துக் கொண்ட சூர்ப்பணகை வேறு விதமாக தன் கருத்தை கூறுகின்றாள். எழுந்திரு மேனியாய் நான் இத்தனை நாட்கள் முனிவர்களுக்கு ஏவல் பணி செய்ததால் என் இளமையும் பெண்மையும் இதுவரை வீணாக கழிந்து விட்டது என்பதை குறிப்பாக உணர்த்தினாள். தன்னை உடனே மணம் செய்து கொண்டு மனைவியாக்கிக் கொள்ளும்படியும் தன் விரக தாபத்தைத் தீர்க்கும் படியும் வேண்டினாள். அப்போது இராமன், என்னால் உன்னைத் திருமணம் செய்ய இயலாது என்று முக்கியமான காரணத்தைக் கூறினான்.

தனக்குத் திருமணம் ஆகிவிட்டது என்பதை கூறாமல் நீ சொல்வது தொன்மையான சாதி முறைக்கு ஏற்றதன்று நீயோ பார்ப்பன மகள் நானோ சத்ரியன் மகன் என்று காரணம்

காட்டினான். அதற்கு சூர்ப்பணகை மசியவில்லை வாதத்துக்கு வாதம் செய்கிறாள் தொடுத்தால் என் தந்தை அந்தணராயினும் தாய் அரச குலத்தில் பிறந்தவள் என்று கூற உரையாடல் தொடர்கிறது. கிட்டத்தட்ட 16 பாடல்களில் இ.ராமனும் சூர்ப்பணகையும் வாதாடுகிறார்கள் உரையாடலின் சொல் திறன் தொடர்கின்றது.

எனது தாய் அரச வம்சத்தை சார்ந்தவள் என்பதால் நானும் சத்திரிய குலத்தை சார்ந்தவள் தான் என்கிறாள். அதற்கு ராமன் அரக்கியான உன்னை மணப்பது என்பது பொருத்தமாகாது என்று அறிவுடையோர்கள் கூறுவார்கள் என்றான். அதற்கு அவள் விடவில்லை நான் வித்யாதார பெண்ணாகி விட்டேன். தேவர்கள் அனுகிரகத்தால் பழிக்கப்படுகின்ற அரக்கர் பிறவியில் இருந்து நீங்கி விட்டேன் என்று பதில் கூறினார்.

அதற்கு ராமன், பெண்ணே! உன்னோடு பிறந்தவர்களில் ஒருவன் மூவுலகத்துக்கும் ஒரே தலைவனான ராவணன் இன்னொருவன் அஷ்ட திக்கு பாலர்களில் ஒருவனான குபேரன் அவ்விருவரில் யாராவது மணம் செய்து கொடுத்தால் மட்டுமே மணம் செய்து கொள்வேன் இன்று அவர்கள் வலிமை எண்ணி அஞ்சுவேன். ஆகவே தனிமையாக வந்த நீ வேறு இடம் செல் என்று கூறினான். உரிமை உள்ளவர்கள் தாரை வார்த்து கொடுத்தால்தான் மணப்பேன் என்று கூறினான் ராமன்

அதற்கு சூர்ப்பணகை பின்வாங்கவில்லை. காந்தர்வ மணம் என்பது அனுமதிக்கப்படுகிறது. காதலால் சிந்தை கலந்து விட்டால் திருமணம் செய்து கொள்ளலாம் என்றாள். அதைக் கேட்ட இராமன் நகைத்து உன்னை அடைவதற்காக தான் நான் அயோத்தியை விட்டு வந்தேன் போலிருக்கிறது நான் செய்த பெருந்தவம் இதுதான் என்று பரிகாசமாக அவளைக் கேலி செய்தான். அப்போது அவன் நகைப்பொலியைக் கேட்டு பர்ணாசாலை உள்ளிருந்து வெளியே வந்த சீதையைப் பார்த்து யாரென்று என்று கேட்டாள் **'.......அரக்கர் என்னும் கான் சுட முளைத்த கற்பின் கனலியை கண்ணிற் கண்டாள்'(கம்ப..ஆரண்ய. கா. சூர்.படலம் பா எ.2789;3-4)**

அரக்கர் என்னும் காட்டை சுட்டுப் பொசுக்க வந்த கற்பெனும் கனலியே கண்களாலே சூர்ப்பணகை கண்டாள் என்று பின்வரப்போவதை முன்கூட்டிச் சொல்கிறான் கம்பன். பிராட்டியை கண்ட சூர்ப்பணகை அவளை திருமகளோ என்ன ஐயமுற்றாள் சீதைக்கும் ராமனுக்கும் இருந்த பொருத்தத்தை பார்த்து பிரமித்தாள். இருப்பினும் தன் காதல் வியாதியால் சீதையையும் தன்னைப்போல் இடையில் வந்தவளே என்று நினைத்து வீரனே இவள் உருவம் உண்மை அன்று இவளும் ஒரு அரக்கி இவளை விட்டு விலகிவிடு என்று கூறினாள் அத்துடன் சீதையை வெருட்டவும் முயன்றாள். தன் மனைவி சீதாப்பிராட்டியை வெருடியதைக் கண்டு ராமன் வெறுத்தான்.

**சூர்ப்பணகை சீதையை தூக்கிச் செல்ல முற்படுதல்**

தன் மனைவி சீதாப்பிராட்டியை வெருடியதைக் கண்டு ராமன் வெறுத்தான். அன்று இரவு முழுவதும் ராமனை நினைத்து சூர்ப்பணகை தவித்தாள். தாடகையின் நெஞ்சில் ராம பானம் தைத்ததை போல சூர்ப்பணகை நெஞ்சில் ராமனை நினைத்ததால் மன்மத பாணம் தைத்து அவளை வருத்தியது. சூரியன் உதித்ததும் மீண்டும் பர்ணசாலைக்கு வந்தால் அந்த சமயம் ராமன் காலை சந்தியாவந்தனம் செய்ய கோதாவரிக்கு சென்று இருந்தான். ராமன் தன்னை வருத்தியதற்கு காரணம் அவள் அவனுடைய வீட்டில் இருக்கும் அந்தப் பெண்தான் அந்தப் பெண்ணை தூக்கி விட்டால் நம் காதலை ஏற்றுக் கொள்வான். அவனை காந்தர்வ திருமணம் செய்து கொள்ளலாம் என்று எண்ணி சீதையை தூக்கிச் செல்ல எண்ணினாள்.

**லட்சுமணன் - சூர்ப்பணகை அங்கீனப்படுத்தல்**

லட்சுமணன் பக்கத்து சோலையில் இருந்து தன் நாயகனின் பிராட்டியை தூக்கிச் செல்வதற்கு முற்படுகின்ற அரக்கியைக் கண்டு மிகுந்த கோபம் கொண்டான். அவள் தலைமயிரை பிடித்து வயிற்றில் உதைத்து தள்ளினான். சூர்ப்பணகை அடங்காமல் சீதாவைத் தூக்குவதற்கு எண்ணியதால் அவளினுடைய மூக்கையும் காதினையும் அறுத்து அவளினுடைய ஒரு பக்க முலையையும் அறுத்தெறிந்தான் அதன்பிறகு தன் கையில் சுற்றி பிடித்த சூர்ப்பணகையின் கூந்தலை விட்டான் இங்கு கம்பனாட்டாழ்வார் சூர்ப்பணகையின் காது மூக்குகளோடு முலைக்காம்புகளையும் லட்சுமணன் அறுத்தான் என்று கூறுகின்றார். இதைத் தவிர்க்க இராமன் இல்லாத போது செய்தான் என்பது கம்பனின் உடைய கற்பனை திறனுக்கான ஒரு சிறந்த சொல் திறன் கதையின் நாயகனாக வரக்கூடிய இராமனின் முன்பாக ஒரு பெண் அடாவடிச் செய்தாலும் அவளை அவ்வாறு உடல் உறுப்புகளை அங்ஙனம் செய்வதை கம்பன் விரும்பவில்லை போலும். ஆதலால் வால்மீகி ராமாயணத்தில் இருந்து மாறுபட்டு ராமன் இல்லாத போது லட்சுமணன் செய்ததாக சொல்லப்படுகின்றது.

இவ்வாறு அங்கீனப்பட்டு பார்த்து ராமன் நீ யார் என்று கேட்க அவள் மீண்டும் தன்னை பற்றி விவரங்களைக் கூற நேற்று வந்தவளோ நீ என்று வினாவினான். இன்று அடையாளம் தெரியவில்லையே என்று கேட்க குழையணிந்த என் காதினையும் கொடி போன்ற என் மூக்கினையும் அறுத்து விட்டால் ஒருவரின் அழகு குலைந்து போகாதோ என்று கேட்டாள். அவள் நிலை கண்டு ராமன் பரிதாபம் கொண்டு இவள் இழைத்த பிழை தான் என்ன என்று லட்சுமணனை கேட்க சீதாபிராட்டியைத் தூக்கிச் செல்ல வந்தாள் என்று சமாதானம் கூறினான். லட்சுமணன் அவளை தூக்கிச் செல்வதற்கு நினைத்தாயா

என்று ராமன் கேட்க அவள் இருப்பதால்தானே நீ என்னை ஏற்றுக் கொள்ள மறுக்கிறாய். ஆதலால் அவளைத் தூக்கிச் சென்று விடலாம் என்று நினைத்தேன் என்றாள். சக்களத்தியைக் கண்டால் என் மனம் கோபம் கொள்ளாதோ? என்றாள். மேலும் சூழ்நிலை அறியாது மீண்டும் தன்னைத் திருமணம் செய்து கொள்ளும்படி ராமனிடம் வேண்டுகின்றாள் இவ்வாறு சூர்ப்பணகை ராமனிடம் வேண்டுகின்ற செய்தியை கம்பன் 11 கவிகளில் ஏற்றுகிறான். இதைக் கேட்ட ராமன் அவளை வெருட்டவே கரனை வரவழைப்பேன் என்று பயமுறுத்திக் கரனின் இருப்பிடம் நோக்கி ஓடுகின்றாள்.

**கரனின் கேள்விக்கு சூர்ப்பணகை பதில்**

அங்கு சென்று கரணின் காலில் விழுந்து **'....செக்கர் மேல் விரிந்த மேகம் என விழுந்தால் அரோ.' (கம்ப..ஆரண்ய. கா. சூர்.படலம் பா எ.2875:4)**

இரத்தம் பெருக செம்பட்டை கூந்தல் விரிய செவ்வானம் படர மேகம் போல விழுந்து கிடந்தாள். உடல் உறுப்புகள் அறுக்கப்பட்டு கோரமாக விழுந்து கிடந்த சூர்ப்பனகைக் கண்ட கரன் உன்னை இங்ஙனம் செய்தது யார் என்று வினாவினான்.அப்போதும் ராமன் மீது கொண்ட காமம் மாறாமல் அவனின் அழகை வர்ணித்து சொல்லுகின்றாள்.

**'இருவர் மானிடர் தாபதர் ஏந்தியவரிவில் வாள்கையர்**

**மன்மதன் மேனியர்'(கம்ப..ஆரண்ய. கா. சூர்.படலம் பா எ.2878:3-4)**

என்று கூறுகின்றாள். நல்ல அழகு படைத்த சுகுமாரர்கள். நல்ல பலம் உள்ளவர்கள் தாமரையின் போன்ற விசாலமான கண்களை உடையவர்கள் மரவுரியையும் மான் தோலை முடித்து இருப்பவர்கள் என்று கரனின் கேள்விக்கு சூர்ப்பணகை பதில் சொல்லுகின்றாள்.

**சூர்ப்பணகை எவ்விடத்தும் ராமனின் அழகை வர்ணித்தல்**

இராவணனின் அவைக்களம் சென்ற போதும் கூட ஏன் இவ்வாறு உன் உறுப்புகள் அறுபட்டு கிடைக்கின்றது யார் இதை செய்தது என்று ஆவேசம் கொண்டு ராவணன் எழுதுகின்ற போது கூட இராம லக்ஷ்மணர்களின் அழகினைக் கூறி அங்கு இருக்கக்கூடிய ஒரு அழகிய பெண்ணை உனக்கு தூக்கி வருவதற்காக நான் சென்றேன் அங்கு இருக்கக் கூடிய வில்லேந்திய தாபதர்கள் என்னுடைய மூக்கினையும் காதினையும் உலகினையும் அறுதெறிந்துவிட்டார்கள் என்று கூறுகிறாள் இந்த சொல்லாடல் திறனே இராமாயணப்போருக்கு மிகப்பெரிய காரணமாக அமைகின்றது.

இவ்வாறு பல படியாக ராமனின் அழகை வர்ணித்துக் கொண்டே செல்கின்றாள்.

**இராவணனிடத்து சூர்ப்பணகை செய்த சூழ்ச்சி சொல்திறன்**

சூர்ப்பணகை நோக்கி ராவணன் கேட்டான் உன் உடலை உன் உறுப்புகளை உன்

காதுகளையும் மூக்குகளையும் இவ்வாறு வலிந்துகு அறுக்கும்படி நீ என்ன குற்றம் செய்தாய்? அதற்கு சூர்ப்பணகை மிகத் தந்திரமாக பதில் சொல்கின்றாள். செந்தாமரை மலரை விட்டு ராமனுடன் வந்தவளும் மின்னல் போன்ற இடையை உடையவளும் மூங்கிலைப் போன்று மெல்லிய தோலை உடையவளுமான சீதையின் அழகை பல படியாக ராவணன் இடத்தில் வர்ணித்தாள்.

**வில்லொக்கும் நுதலென்றாலும் வேலொக்கும்விழியென்றாலும்**
**பல்லொக்கும் முத்தென்றாலும் பவளத்தை உக்கும்**
**இதழ் என்றாலும் சொல்லுக்கும் பொருள் ஒவ்வாதால் சொல்லலாம்**
**உவமை உண்டோ நெல்லுக்கும் நெல்லொக்கும்**
**புல்லெ ன்றாலும் நேருரைத் தாகவற்றே"(கம்ப..ஆரண்ய. கா. சூர்.படலம் பா எ.3140)**

சூர்ப்பனகை கூறுகின்றாள். சீதையின் அங்கங்களுக்கு இணையாக உவமையாகக் கூறுவதற்கு இந்த பூமியில் ஏதேனும் பொருள் இருக்கிறதா? அத்தகைய ஒப்பற்ற அழகு உடையவள். அத்தகைய ஒப்பற்ற அழகியைத் தூக்கி வருவதற்காக சென்றபோதுதான் நான் இப்படி உறுப்புகள் இழந்து வந்து நிற்கின்றேன் என்று ராவணன் மனதில் சீதையை வரிந்து கொண்டு காமம் கொள்வதற்கான சூழ்ச்சியினை மிகச் சிறப்பாக தன் சொல்லாடல் மூலமாக நிகழ்த்துகிறாள்.

**“பாகத்தில் ஒருவன் வைத்தான் பங்கயத்து இருந்த பொன்னை**
**ஆகத்தில் ஒருவன் வைத்தான் அந்தணன் நாவில் வைத்தான்**
**மேகத்தில் பிறந்த மின்னை வென்ற நுண்ணிடை யினாளை**
**பார்த்தோம் வீர பெற்றால் எங்ஙனம் வைத்து வாழ்தி?" (கம்ப..ஆரண்ய. கா. சூர்.படலம் பா எ.3142)**

முக்கடவுள்களில் சிவன் தன் இடப்பாகத்தை உமையாளுக்கு தந்திருக்கின்றான் காக்கும் கடவுள் திருமாலோ தன் மார்பு பகுதியில் திருமகளுக்கு இடம் தந்திருக்கிறான் படைத்த படைப்பு கடவுள் பிரம்மாவோ தன் நாவில் சரஸ்வதியை வைத்துள்ளான் மேகத்தின் மின்னலை வென்ற நுண்ணி இடையாளான சீதையை பெற்றால் நீ எவ்விடத்தில் வைத்துக் கொண்டு நீ வாழ்வாய் என்று ராவணனுக்கு புறமூட்டுகிறாள் உரம் ஊட்டுகிறாள் கம்பன் இவ்விடத்தில் சீதை வந்தால் நீ வாழவே முடியாது என்பதை மறைப்பொருளாக கூறுகிறான் இவ்வாறு உனக்காகச் சீதையை நான் தூக்கி வருவதற்காக சென்றபோதுதான் இப்படி உடல் அங்கீனப்படுத்தப்பட்டு அவமானப்படுத்தப்பட்டேன் என்று முறையிட்டாள்.

**சூர்ப்பணகை செய்த சூழ்ச்சி சொல்திறத்தால் இராவணனுக்கு ஏற்பட்ட அழிவு நிலை**

சூர்ப்பணகையின் சொல்லாடல் திறத்தால்தான் காமவெறி தலைக்கேறிய ராவணன் விரக வேதனைக்கு உள்ளான் நான் உடனடியாக நான் சீதையை தலைவலிக்கின்றேன் என்று கூறி உருவெளி தோற்றத்திலே சீதையைக் கண்டான். இவள் தானே சீதை என்று ராவணன் கேட்க சூர்ப்பனகையோ இவன் ராமன் என்று கூறுகின்றாள் இவ்வாறு அண்ணன் தங்கை இருவரும் காம மயக்கத்திலே அவரவர் மயக்கம் கொண்ட ராமனையும் சீதையும் அடையாளம் காட்டுகிறார்கள்.இந்த இடத்தில் நகைச்சுவைத் ததும்ப கம்பன் தன் கவியில் வைத்து விளையாடுகின்றான்.

மேற்படி கவிதையில் காமவெறி கொண்டவர்களின் மதி மயக்கத்தை நகைச்சுவை ததும்ப வர்ணிக்கிறான் கவிஞன் கம்பன் இப்படி காம மயக்கங் கொண்டு இருவரைக் கொண்டு காப்பியத்தின் அடுத்த நகர்வை நகர்த்துகின்றான். ராமனின் மேல் கொண்ட மயக்கத்தால் சூர்ப்பனகை சீதையைத் தூக்கிவருமாறு இராவணனுக்கு உபதேசித்தாள். அதைக் கேட்ட ராவணன் மந்திரிகளுடன் ஆலோசித்து தன் மாமன் மாரீசனை அணுகினான். மாரீசன் எவ்வளவு தடுத்தும் கேளாமல் கண்டிப்பாக மாயமானாக நீதான் மாற வேண்டும் என்று கட்டளையிட்டான். அதற்கு உடன்பட்டு சீதை மலர்கொய்கின்ற சோலையில் அழகிய பொன்மானாய் மாரீசன் அங்கு வந்தான். விரும்பத்தகாத அழகை விரும்பினால் எவ்வளவுதான் வரங்கள் வாங்கி வந்தாலும் வல்லமை பெற்றிருந்தாலும் சகாப்தம் கெடும் என்பதற்கு இராவணனும் விரும்பத்தகாத அழகை விரும்பியதால் ராமனை விட்டு பத்தாண்டுகள் பிரியக்கூடிய நிலையை சீதையும் அடைந்ததை அடுத்து வரக்கூடிய பகுதிகள் எடுத்துரைக்கின்றன.

**ஆய்வு முடிவு**

சூர்ப்பணகையினுடைய சொல்லாடல் திறந்தான் என்பதை கம்பர் தன் கவிச்சித்திரத்தின் மூலமாக மிக அழகாக நகைச்சுவையோடும் கற்பனைநயத்தோடும் மிக அழகாக எடுத்துரைக்கின்றார்.

ஒரு ஜனரஞ்சகமான ரசிப்புத் தன்மையோடு இருக்கக்கூடிய பகுதி என்று கூறினால் கம்பராமாயணத்தில் அது ஆரண்ய காண்டம் என்று சொல்லலாம்.அதற்குக் காரணம் அக்காண்டத்தில் எல்லை கடந்த ஆசைகளும் பேராசைகளும் நிரம்பி வழிகின்றன. அதனால் ஏற்படக்கூடிய பேராபத்துகளை அடுத்தடுத்து வரக்கூடிய காண்டங்களில் மிக அழகாக எடுத்துரைக்கின்றார் கவிச்சக்கரவர்த்தி கம்பர்.எப்போதும் துன்பம் ஒரு அழகான துணையோடு தான் வருகிறது என்பதனை கம்பனாட்டாழ்வாரின் கவித்திறன்களின்

வாயிலாக நாம் அறிய முடிகின்றது.

கம்பராமாயணத்தில் சூர்ப்பணகை ஒரு சாதாரண அரக்கி அல்ல. அவள் காப்பியத்தின் திருப்புமுனை நகைச்சுவையின் மையம் சூழ்ச்சியின் வடிவம் சொல்லாடல் திறனின் எடுத்துக்காட்டு ஆகிய அனைத்தையும் ஒருங்கே தன்னுள் கொண்ட பாத்திரமாக விளங்குகின்றாள். கம்பன் அவளது உரையாடல்களின் வாயிலாக மொழிநயம், கற்பனை வளம், நகைச்சுவை உணர்வு, உளவியல் நுட்பம் ஆகியவற்றை மிகச் சிறப்பாக வெளிப்படுத்தியுள்ளார். எனவே கம்பராமாயணத்தில் சூர்ப்பணகையின் சொல்லாடல் திறன் என்பது தனித்த ஆய்விற்குரிய வளமான இலக்கியப் பரப்பாகும்.

**சுருக்கக்குறியீட்டு விளக்கம்**

1.கம்ப. கம்பராமாயணம்

2.ஆர - ஆரண்ய

3.கா - காண்டம்

4.சூர். சூர்ப்பணகை

5.ப.படலம்

6.பா.பாடல்

7.எ. எண்

**துணைநூற்பட்டியல்**

1.**கம்பராமாயணம்**, ஆரண்ய காண்டம், புதுமை பதிப்பகம் காரைக்குடி பதிப்பு 1943

2. **கம்பராமாயணம்**, ஆரண்ய காண்டம், வை.மு. கோபால கிருஷ்ணமாச்சாரியார் விளக்க உரையுடன், கழக வெளியீடு, சென்னை. நான்காம் பதிப்பு -1965

3 . **கம்பன் கண்ட பெண்கள்** , சாண்டில்யன், வானதி பதிப்பகம், சென்னை -17, நான்காம் பதிப்பு -2002

4. **ஔவையார் அருளிய மூதுரை** , கழக வெளியீடு,திருநெல்வேலி. பதிப்பு ஆண்டு.1927

5. **தமிழ்மின் நூலகம்** Tamil Digital library தமிழ் இணைய கல்விக் கழகம்

6. **சொல்வனம்**https://solvanam.com

Gcwk http://vaiyan blogspot.com

7. **Internet Archive** : https://archive.org. Srikambaramayanam

8. **Chennai library :** https://www chennailibrary.com

9. **தமிழ்த் துளி** : https://vaiyan.blogpot,.com